

# தமிழ்ச் சிட்டு

குரல் 25
இசை 9

விலை: உரு. 3.00

கன்னி 2033
( செபுதம்பர் - 2002 )

சிறுவர் கலை
இலக்கியத் திங்களிதழ்

# வாழ்க்கையில் பீடுசேர் !

இன்பத்தை யே, நாடி
ஏற்றத்தை யே, தேடி
ஏங்கிக் கலங்காதே பாரில்! — அக்கால்
இயற்கை விளங்காது நேரில்! — பெருந்
துன்பத்தையும் நாடு!
துயரத்தையும் தேடு!
தொல்லையை யும்சுவை பார்ப்பாய்! — வருந்
துன்பமும் இன்பமென் றார்ப்பாய்!

குன்றுக்கு மேலேயே
கொண்டையத் துச்சிக்கே
சென்று வரல் ஒரு நேரம் — மலை
சேருவ தே, அன்று வீரம்! — நீ
நின்ற நிலத்துக்கு
நேராக—கீழாக
நெட்டை நெடுங்குழி தோண்டு — உள்
நெருப்புக் குழம் பையுந் தாண்டு!

உண்ணும் உணவுக்கும்
உறங்கும் உறக்கத்தும்
ஓயா தலைவதோ வாழ்க்கை? — ஓர்
எறும்புக்கும் உண்டந்தப் பூழ்க்கை! — நின்
எண்ணுந் திறனுக்கும்
ஏற்ற வலிமைக்கும்
என்னதான் உண்டுகொல் பீடு? — உயிர்
ஏகின பின்சுடு காடு!

விசும்பை அளாவிடு!
விண்ணை அளந்திடு!
வெட்ட வெளியினில் கால்வை — கை
வீசி நடத்திடு வாழ்வை! — ஒரு
பசும்புல்லின் வேருக்குள்
பறவையின் இறக் கைக்குள்
பார்வையை, எண்ணத்தை நீ, வை — பெரும்
பாட்டில் நனைத்திடு நாவை!

—பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

-1971

சிறுவர் கலை இதழ்

குரல்–25 இசை–9

"இன்றைய பயனோ
　　நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
　　நாளைய உலகம்!
நன்று செய்வதே
　　நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
　　இருப்பது புகழே!

– பாவலரேறு

நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை 601 302.
தொலைபேசி எண் : 277 1231

# நோயில்லாமல் வாழ்தல்.

நம் எல்லாருக்குமே ஏதாவது ஒரு நோய் தொற்றிக் கொள்கிறது. நோய் தொற்றிக் கொள்வது என்பது ஏதோ இயல்பானது அன்று.

உடலையும், உடலின் ஒவ்வோர் உறுப்பையும் முறைப்படப் பாதுகாத்தால் நோய் வராது.

வீட்டிற்கு வெளியே போய் விட்டுத் திரும்புபவர்கள் முகம், கை, கால்களை முழுமையாகக் கழுவ வேண்டும்.

கை, கால் விரல் உகிர்(நகங்)களை அப்போதைக்கு அப்போது வெட்டவேண்டும். அழுக்குச் சேர விடக்கூடாது.

கண்களைக் குளிர்ந்த நீரில் காலை மாலை இருநேரங்களிலும் கழுவுதல் வேண்டும்.

மூக்குத்துளை காதுதுளைகளை மெதுவாகத் தூய்மை செய்திட வேண்டும்.

ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் குடிக்கவேண்டும். காலையும் மாலையும் மலத்தைக் கழிக்க வேண்டும்.

இவையெல்லாம் முறைப்படச் செய்வதோடு, காலை மாலையில் ஓர் அரைமணி நேரமாவது உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

இவற்றையெல்லாம் முறைப்படச் செய்தால் நோய்கள் நம்மை அணுகா.

நோயில்லாமல் இருந்தால்தான் நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியும். எல்லாரும் ஓடித்திரியும்போது — நாம் நோயால் கூனிப் படுத்துக் கொண்டிருந்தால் நம் மனம் சோர்ந்துபோய்விடும்.

எனவே நோயில்லாமல் வாழ்வதே வாழ்க்கை.

உடலில் நோயில்லாமல் பார்த்துக் கொள்வதுபோல் உள்ளத்திலும் நோயில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அறியாமை, அழுக்காறு, சினம், புறங்கூறுதல் போன்ற பல நோய்கள் நம் உள்ளத்தைப் பாழடித்துவிடும்.

இந்த நோய்களும் நம்மைப் பிறர்போல் இயங்கவிடா.

மகிழ்ச்சியாய் நம்மை வாழவிடாது.

அறிவு நூல்களைப் படித்தல், இயற்கையை நுகர்தல், எடுத்தப் பொருளை எடுத்த இடத்தில் வைப்பதான ஒழுங்கு நடைமுறை கொள்ளுதல், மகிழ்வாய்ப் பேசுதல் — இவை யெல்லாம் உள்ள நோய் வராமல் தடுக்கும் மருந்துகள்.

உடல் நோயும், உள்ள நோயும் வராமல் வாழ்வதுதான் மாந்த வாழ்க்கை. அறிவு வாழ்க்கை.

*


# மழலைக் கணக்கு




துளிர் வகுப்புகளுக்கான 'மழலை கணக்குப் பொத்தகம் — அழகான படங்களுடன் அச்சாகி வெளிவந்திருக்கிறது.


தமிழ்வழிக் கல்விக் கழகம் வெளியிட்டிருக்கிற அந்த நூலின் விலை உரு. 28/-.


நூல் கிடைக்குமிடம்:

*தமிழ்வழிக் கல்விக் கழகம்,*
*53, வள்ளுவர் நகர், அடையாறு,*
*சென்னை - 600 020.*

# நீங்களும் செய்யலாம்.


1. படத்தில் உள்ளதுபோல் நடுவில் 2 அ.மா.யில் பாதி வெட்டவும்.







2. வெட்டி வைத்துள்ளதை மூன்றாக மடிக்க வேண்டும்.

3. நடுவில் உள்ள பகுதியை நீளமாக வெட்டுங்கள்.







4. படத்தில் உள்ளதுபோல் வரும்.



5. மேலிருந்து இழுக்க வேண்டும்.




6. விரிவதைப் பார்க்கலாம்.



7. இதோ, நீங்கள் செய்த சப்பான் விசிறி!

# வரகு கோழி.

ஆப்பிரிக்கா, ஆத்திரேலியா, ஆகிய கண்டங்களிலும் ஆசியா கண்டத்தின் தென்பகுதியிலும் வரகுக் கோழி காணப்படுகிறது. இப்பெரும் பறவையினம் குன்றி அழியும்



நிலையிலுள்ளது. இதன் தசை சுவையாக இருப்பதால், இதை வேட்டை யாடுவோர் பலர்.

இது வான்கோழியைவிட மிகப் பெரியது. மஞ்சள்நிறக் கால்களுடன் ஏறக்குறைய 4 அடி உயரம் இருக்கிறது. நன்கு வளர்ந்த ஆண்கோழி 5 கல்லெடை எடையிருக்கலாம். மேற்பாகம் சிவலையாகவும் அடி வெளுத்தும் நெஞ்சில் ஒரு கருங்குறியும் இருக்கும். மொட்டைக் கருங் கொண்டையை உடையது. இதன் கால்களில் பின்விரல்கள் இல்லை. புதர் அதிகமாக இல்லாத வெளியிடங்களில் தத்துக்கிளி போன்ற பூச்சிகளையும், பல்லிகளையும், சிறுபாம்புகளையும் பிடித்துத் தின்னும் தவச(தானிய)ங்களையும் தின்னும். நன்கு ஓடும் ஆற்றலும், பெரிய இறக்கைகளைப் பரப்பி நன்றாகப் பறக்கும் திறமையும் இதற்கு உண்டு.

# வேப்பமரம்

வேப்ப மரத்தை இயல்பாக நாம் எங்கும் காணலாம். வேம்பு என்றும் இதற்குப் பெயர் உண்டு. ஏரிக் கரைகளிலும் சாலை ஓரங்களிலும் நிழல் தரும் மரங்களாக இவை வளர்க்கப் படுகின்றன. இம்மரம் கசப்புத் தன்மை உடையது. இதன் இலை, காய், விதை முதலியன மிகக் கசப்பானவை. எனினும் இது மிகவும் பயனுள்ள மரங்களுள் ஒன்று.

வேப்ப மரத்தில் மலை வேம்பு, சந்தன வேம்பு என வேறு வகைகளும் உண்டு.

வேப்ப மரம் ஏறத்தாழ 15 மாத்திரி(மீட்டர்) உயரம் வரை வளரும். இதன் இலைகள் அரம்பப் பல் வடிவினதாக இருக்கும். இலையை மருந்தாகப் பயன்படுத்துவது உண்டு. இலையை அரைத்து அல்லது காயவைத்துப் பொடியாக்கி உடம்பில் தேய்த்துக் குளிப்பார்கள். கொழுந்து இலையைத் துவையல் செய்து உண்பதும் உண்டு.



வேப்ப மரம் ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் பூக்கும். பூக்கள் மிகச் சிறியன; கொத்துக் கொத்தாக இருக்கும். வெண்மை நிறமுள்ள இப்பூவைச் சமைப்பதும் உண்டு.

வேப்பம் பூவுக்கு மற்றொரு பெருமையும் உண்டு. இது முற்காலத்தில் பாண்டிய அரசர்களின் சின்னமாக விளங்கியது. பாண்டிய அரசர்கள் சிறப்பு நிகழ்ச்சிகளின்போதும் போருக்குப் புறப்படும்போதும் வேப்பம் பூவாலாகிய தலை மாலையை அணிவது வழக்கம்.

காய் பசுமையாக, நீள் உருளை வடிவில் ஏறத்தாழ இரண்டு நூறு மாத்திரி நீளமுள்ளதாக இருக்கும். காயைக் கிள்ளினால் வெள்ளை நிறமுள்ள பால் வடியும். காய் முற்றி மஞ்சள் நிறங்கொண்ட பழமாக மாறும். பழம் சதைப்பற்று உள்ளது. இனிப்பாக இருக்கும். பறவைகள் இதை விரும்பி உண்ணும். பழங்களை விழுங்கும் பறவைகள் விதைகளை எச்சத்துடன் வெளியேற்றுவதால் வேப்ப மரங்கள் பல இடங்களிலும் முளைத்து வளர்கின்றன.

பழங்களைச் சேமித்து ஊற வைத்து, சதைப்பற்றை நீக்கி விதைகளைப் பிரிப்பார்கள். பிறகு விதைகளை நெரித்து, உள்ளிருக்கும் பருப்பை எடுத்து, செக்கிலிட்டு ஆட்டி, எண்ணெய் எடுப்பார்கள். எண்ணெய் மஞ்சள் நிறத்துடன் மிகக் கசப்பாக இருக்கும்; அருவருப்பான நாற்றமுடையது. எண்ணெய் பெரும்பாலும் விளக்கு எரிப்பதற்கே பயன்படுகிறது. இதில் விளக்கு மிக ஒளியாக எரியும்.

இதை மருந்தாகவும், தேய்த்துக் குளிக்கும் எண்ணெயாகவும் பயன்படுத்துவத உண்டு. எண்ணெயைத் தூய்மைட படுத்தி வழலை(சோப்) தயாரிக்கிறார்கள். சில பற்பசைகளிலும் இது சேர்க்கப் படுகிறது. எண்ணெய் எடுத்தபின் எஞ்சும் பிண்ணாக்கு வயலுக்கு நல்ல உரமாகும்.

வேப்பமரம் ஏறத்தாழ 80 ஆண்டுகள் வரை வாழும். இதன் மரம் வீடு கட்டவும் பலகைகளாக அறுத்து மரப் பொருள்கள் செய்யவும் பயன்படுகிறது.

**தமிழ்ச்சிட்டு**
பழைய படிகள்
**சலுகை விலையில்...**
கடந்த ஆண்டுகால தூயதமிழ் வரலாற்றுக்கான செய்திகள்...சிறுவர்களுக்கான அரிய செய்திகள்...

**தமிழ்ச்சிட்டு**
பழைய படிகள்
(சில இதழ்கள் விடுபாட்டுடன்)
உரு. 50/-
5 தொகுப்புகளாக

# வலி

உடலைக் காக்க இயற்கையாகப் படைக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் வலி ஒன்று. வலி தோன்றுதல், அதன் போக்கு, குணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து இன்ன இடத்தில் சிதைவு அல்லது நோய் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறியலாம். சிதைவு அல்லது நோய் ஏற்பட்ட இடத்திலிருந்து நரம்பு முனைகள் அனுப்பும் செய்கையே வலியாகும். சில நேரம் உடலின் ஆழத்திலிருக்கும் உறுப்பில் நோய் ஏற்பட்டுத் தோலில் எங்கேயோ வலி தோன்றக் கூடும். இதற்குக் காரணம் நோயுற்ற உறுப்பிலிருந்து செல்லும் உணர்ச்சிக்கும் வலி தோன்றும் தோலின் உணர்ச்சிக்கும் மூளைத் தண்டில் ஒரே அடிப்படை இருப்பதே காரணமாகும். உணர்ச்சியை எழுப்பும் நரம்புகள் தோற்பரப்பில் அடுத்தடுத்து அதிகமாகப் பரந்திருக்கின்றன. தசைகளில் சற்றுக் குறைவு.

குடல் போன்ற அக உறுப்புகள் நன்றாகக் காக்கப் பெற்றிருப்பதால், உணர்ச்சி நரம்புகள் அவற்றுக்குத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக மூளையும் கல்லீரலும் உணர்ச்சி இல்லாத உறுப்புகளாகையால் துமுக்கி(துப்பாக்கி)க் குண்டு(ரவை) உள்புகுந்தால்கூட வலி தோன்றாது. நுரையீரலில் வலி உண்டாகாது. எலும்பிலும் வலி இருக்காது. இவ்வுறுப்புகளைச் சூழ்ந்த சவ்வுகள் அழுத்தப் பட்டாலோ அழற்சி வசமானாலோ பொறுக்கமுடியாத வலி உண்டாகும்.

வலியைப் போக்க 'மார்பின்' போன்ற மருந்துகளை உடலுக்குள் செலுத்துவதைப் பார்க்கலாம். இவை மூளைத் தண்டு வழியாக மூளைக்கு வரும் வலியுணர்ச்சி செய்கையை திருப்பி அனுப்புகின்றன. 'மார்பின்' போன்ற வேதி அமைப்பைக் கொண்ட 'எண்டார்பின்கள்' என்ற வேதிப் பொருள்கள் மூளையிலுள்ள 'பிட்யூட்டரி' சுரப்பியிலிருந்து வெளிவந்து வலியுணர்ச்சியின் செய்கையைத் தானே திருப்பி விடுவதும் உண்டு. இதுவே சிலர் வலியைக் குறைவாக உணர்வதற்கும் சிலருக்கு உள நோய் மருத்துவத்தால் வலி தெரியாமல் இருப்பதற்கும் காரணம் எனக் கருதப்படுகிறது.

*

# கேடு நினைத்த நரி.

—க. சண்முகசிதம்பரம்—

அறுகம் புல்லை மேய்ந்திட
ஆடுகள் இரண்டு சென்றன
விரும்பி உண்ணும் போதிலே
வருத்தம் வந்து சேர்ந்தது!

முரட்டுக் கிடா இரண்டுமே
முட்டி மோதிக் கொண்டன.
அரத்தம் தலையில் வடிவதை
அங்கோர் நரியும் பார்த்தது!

இரக்கப்பட்டுச் சொன்னது
குருதி துடைத்து விடுவதாய்
பரக்கப் பரக்கத் துடைத்தது
பச்சை அரத்தம் குடித்தது.

ஊற்றங் கொண்ட குருதியை
உறிஞ்சி நன்றாய் குடித்தது
சீற்றங் கொண்ட ஆடுகள்
சேர்ந்து மீண்டும் மோதின!

இடையில் நரியும் வந்திட
இன்னும் விரைந்து மோதின
உடம்பில் கொம்பு குத்திட
ஊளை யிட்டு மாய்ந்தது.


அன்றிலிருந்து ஆடுகள்
அன்பாய்ச் சேர்ந்து வாழ்ந்தன
என்றும் சண்டை போடாமல்
ஒற்றுமையாய் மேய்ந்தன!


கேட்டைப் பிறர்க்கு நினைப்போர்க்குக்
கெடுதல் வந்து சேருமே
ஏட்டின் மூலம் அறிந்ததை
ஏற்றுக் கருத்தில் வைப்போமே!

*

# மெல்லுடலிகள்

நத்தை, மட்டி, ஆளி, முத்துச்சிப்பி, கணவாய் முதலிய உயிரினங்களின் உடல் மிகவும்





மென்மையாக இருக்கும். இவற்றை மெல்லுடலிகள் என்பர். இவற்றுக்கு உடலில் முதுகெலும்பு கிடையாது. எனினும் பெரும்பாலானவற்றுக்குக் கடினமான ஓடுகள் உண்டு. இவை கூடுகளாகப் பயன்படுகின்றன. கடற்கரைகளில் காணப்படும் அழகான கிளிஞ்சில்களும், சிப்பிகளும், சோழிகளும் மெல்லுடலிகளின் கூடுகளேயாகும்.

ஒவ்வொன்றுக்கும் கெட்டியான தசையாலான தட்டையான உறுப்பு ஒன்று உண்டு. இவ்வுறுப்பு இவ்வுயிர்கள் இடம்பெயர்ந்து செல்வதற்குக் கால்போல் உதவுகிறது. ஒவ்வொன்றிலும் போர்வை எனப்படும் மடிப்பு உள்ளது, பெரும்பாலான மெல்லுடலிகளில் இந்தப் போர்வையிலிருந்து ஒருவகைச் சுண்ணாம்புப் பொருள் சுரந்து கூடு உண்டாகும். சிலவற்றில் இக்கூடு ஒரே துண்டு அல்லது ஓடு உள்ளதாக இருக்கும். சிலவற்றின் கூடு இரண்டு துண்டுகள் அல்லது ஓடுகள் உள்ளதாக இருக்கும். இந்தக் கூடு இவ் வுயிரினங்களின் நெஞ்சாங் குலை, வயிறு முதலிய உறுப்புகளை மூடிப் பாதுகாக்கிறது. பெரும்பாலான மெல்லுடலிகளுக்குத் தனியாகத் தலை கிடையாது. ஆனால் உடலில் தலைப்பகுதி உண்டு.

மெல்லுடலிகளில் ஏறக்குறைய 45,000 இனங்கள் உள்ளன. இவற்றைக் காலின் அமைப்பைக் கொண்டு ஐந்து பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். நத்தை, சங்கு போன்றவற்றுக்குக் கால்கள் வயிற்றில் அமைந்திருக்கும். இவை 'வயிற்றுக் காலிகள்' எனப்படும்.


முத்துச் சிப்பிகள், ஆளிகள்,


மட்டிகள் முதலியவற்றின் கால்கள் கோடரி வடிவில் இருக்கும். எனவே இவை 'கோடரிக்காலிகள்' எனப்படும்.




ஓட்டுக் கணவாய், ஈர்க்குக் கணவாய், பேய்க் கணவாய், கடம்பான் முதலிய கணவாய்கள் 'தலைக்காலிகள்' எனப்படும். இவற்றில் காலின் ஒரு பகுதி தலையைச் சூழ்ந்து கொண்டிருக்கும். யானைத் தந்தக் கிளிஞ்சில் போன்ற சில உயிரினங்கள் அடங்கிய 'படகுக் காலிகள்', கவசக் கிளிஞ்சில்கள் முதலிய சில உயிரினங்கள் அடங்கிய 'இரட்டை நரம்பிகள்' ஆகிய இரண்டும் மிகச் சிறிய பிரிவுகள்.


மெல்லுடலிகளில் பெரும்பாலானவை நீரில் வாழ்கின்றன; சில நன்னீரிலும் பல உப்புநீரிலும் வாழ்பவை. சிலவகை நத்தைகள் நிலத்திலும் வாழும்.





நத்தை, கணவாய் போன்ற மெல்லுடலிகளை மக்கள் சிலர் உண்பார்கள். முத்துச்சிப்பியிலிருந்து முத்து கிடைக்கிறது. முத்துச் சிப்பி, கிளிஞ்சில் போன்றவற்றால் பொத்தான்கள் செய்கிறார்கள். கிளிஞ்சில் சுண்ணாம்பு தயாரிக்கப் பயன்படுகிறது. சங்கிலிருந்து மோதிரம், வளையல், பதக்கம், தொடரி, ஊசி முதலியன செய்கிறார்கள். சோழி அழகு வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகிறது. ◘

# நிலவு அல்ல.



அருகில் உள்ள படம் நிலவு அல்ல.

நிலவிலிருந்து இந்த உலகம். அப்பலோ 11 நிலவிற்குச்ச சென்றபோது ஆர்ம்சுராங்கால் எடுக்கப்பட்ட படம்.



அதேபோல் நிலவின் மணற்பரப்பில் ஆர்ம்சுராங்க்கின் கால் தடம்.


# உலகிலேயே பெரிய மணி



உலகில் அதிக எடையுள்ள மணி மாசுக்கோவில் உள்ளது. ஏறத்தாழ 216 கல்லெடை (டன்)யாக உள்ள அந்த மணியின் குறுக்களவு 22 அடி 8 விரற்கடை (அங்குலம்). அதன் உயரம் 19 அடி. அதன் தடிமன் 24 விரற்கடை.

# வானவில்

கதிரவனின் ஒளி செம்மையாகத் தோன்றினாலும், அதில் சிவப்பு, பழுப்பு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், செந்நீலம்(ஊதா) ஆகிய ஏழு நிறங்கள் அடங்கியுள்ளன. ஒரு பட்டகத்தின் வழியே செல்லும் கதிரவ ஒளி, அதன் மறுபுறம் இந்த ஏழு நிறங்களாகப் பிரிந்து செல்லும் (பார்க்க: ஒளி) மழைத்துளி ஒவ்வொன்றும் ஒரு பட்டகத்தைப் போலச் செயல் படுகிறது. கதிரவனின் ஒளிக்கதிர் ஒன்று, ஒரு மழைத்துளியில் புகும்போது, அது பல நிறக் கதிர்களாகப் பிரிக்கப்படுகிறது. மேலும், நீர்த்துளியின் பின்புற மானது ஒரு கண்ணாடி போலச் செயல்பட்டு, அந்நிறக் கதிர்களைப் எதிரொளி செய்கிறது. இவ்வாறு எதிரொளி வீசும் நிறக் கதிர்கள், நீர்த்துளியை விட்டு வெளியேறும் போது, ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு கோணத்தில் கோட்டமடைந்து, தனித்தனிப் பாதையில் செல்கின்றன. இவ்வாறு, அதிகமான நீர்த்துளிகளால் கதிரவனின் ஒளிக்கதிர்கள் கோட்டமடைந்து மீளுவதால் ஏற்படும் நிறமாலையே வானவில்லாகத் தோன்றுகிறது.



வானவில்

வானவில் தோன்றுவதற்கு மழைத்துளிகள் விழுந்து கொண்டிருக்க வேண்டும்; வெயிலும் இருக்கவேண்டும். மழைத்தூறல் நின்றால் வானவில் மறைந்து விடும். மேலும், வானத்தில் கதிரவன் தரையிலிருந்து $42^0$ கோணத்திற்கு மேலே இருந்தால்

மழைத்துளியில் இருந்து வெளி வரும் ஒளி தரையை எட்டாது. ஆகவே, காலையில் மேற்கு வானத்திலும், மாலையில் கிழக்கு வானத்திலும் மட்டுமே வானவில் காணப்படும்.

கதிரவன் தாழ்வாக இருந்தால் வானவில் பெரிதாகத் தெரியும். கதிரவன் எழுகின்ற அல்லது மறைகின்ற நேரத்தில் தோன்றும் வானவில் அரைவட்ட அளவிற்குக் காணப்படும். நீர் வேகமாக விழும் அருவிகளின் அருகே தோன்றும் நுண்ணிய நீர்த்துளிகளின்மீது கதிரவனின் ஒளி விழும்போது அங்கு வான வில்லின் நிறங்கள் வில்போலவே தோன்றுகின்றன.

மிக அரிதாக நிலவு ஒளியினாலும் வானவில் உண்டாவதுண்டு. இதன் நிற அமைப்பும் கதிரவ வானவில்லைப் போன்றதேயாகும். ஆனால் கதிரவனைவிட நிலவின் ஒளி மங்கலாக இருப்பதால், நிலவினால் உண்டாகும் வானவில்லும் மங்கலாகவே தெரியும்.

*

---

# கணிப்பொறி

தோழர்களே! தோழர்களே! வாருங்கள்
சொக்குப்பொடி போட்டதுபோல் பாருங்கள்!
ஆழக்கிணற்றில் உள்ளதெல்லாம் வெளியிலே
அழகாகத் தெரிவதுபோல் பாருங்கள்!

கணக்கு வகை தமிழின் வகை யாவுமே
கணினி எனும் பெயராலே சொல்லுமே!
பிணக்கின்றித் தெளிவாகச் சொல்லிடும்
பெரிய பெரிய கணக்குவகை யாவுமே!

ஊர்ச்செய்தி போர்ச்செய்தி காணலாம்
திரைப்படங்கள் பற்பலவும் பார்க்கலாம்
நீரோட்டமாய்ப் பாட்டு நன்கு கேட்கலாம்
நெளிகின்ற மென்பொருள்கள் சேர்க்கலாம்

பார்ப்பதற்குப் பெட்டிபோல இருந்திடும் — இது
பண்ணும் வேலை வெளிநாட்டுக்கும் எட்டிடும்
துணிந்து கற்க வேண்டுமிதனை நீயுமே
தோல்வியின்றி வெற்றிகண்டு மகிழலாம்!

பாவலர் வடிவேலனார்

❑

# கணிப்பொறி

—க. குழந்தைவேலன்—

கணிப்பொறியாம் கணிப்பொறி
கணக்குப்போடும் கணிப்பொறி
சுட்டெலியைச் சொடுக்கினால்
சொன்னபடிக் கேட்டிடும்!

விதையை நட்டால் தோட்டத்தில்
விளையும் பயிர்கள் போலவே
எதையும் கொடுக்கக் கொண்டிடும்
எழுப்பிக் கேட்டால் தந்திடும்!

படம்பாடம் பார்க்கலாம்
பாட்டுநன்றாய்க் கேட்கலாம்
கட்டமின்றிக் காய்களின்றிக்
களிப்பாய் ஆட்டம் ஆடலாம்!

எல்லைகடந்த நாட்டிலும்
இருக்கும் உறவு முறைகளை
கண்டுநேரல் பேசலாம்
கருத்துப் பலவும் கூறலாம்.

உந்துவண்டி ஏறாமல்
உயரவானில் பறக்காமல்
எந்த நாடும் செல்லலாம்
இன்பமாக உலவலாம்!

கணக்கிலாத பணிகளையும்
சுணக்கமின்றி செய்திடும்
காலம்விளைத்த கணிப்பொறி
கற்றுத் தேர்ந்து வாழ்வோமே!

# இலியானர்டோ டாவின்சி



பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மேதை இலியனார்டோ டா வீன்சி. இவர் சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், கட்டடக் கலைஞராகவும், இசை மேதையாகவும் இருந்தார். மேலும் கணிதம், பொறியியல், நிலைத்திணை (தாவர)இயல், உயிரியல், வானவியல் ஆகிய துறைகளிலும் இவர் பேரறிஞராக விளங்கினார். பறவைகள் பறப்பதைக் கூர்ந்து கவனித்து வானத்தில் பறப்பதற்கென்று சறுக்கு வானூர்தியின் மாதிரி ஒன்றை இவர் வரைந்தார். போருக்குப் பயன்படும் தாங்கிகளையும் பண்டக் கலங்களையும் உருவாக்குவதற்குப் படங்களை வரைந்தார். மாந்தனின் உடலமைப்பைப் பற்றியும் இவர் விளக்கமான குறிப்புகளை எழுதியுள்ளார்.

இத்தாலியில் பிளாரன்சு அருகே வீன்சி என்னும் சிற்றூரில் இலியனார்டோ பிறந்தார். இசையிலும் சித்திரம் வரைவதிலும் இவருக்கு மிகுந்த விருப்பம் இருந்தது. பல அழகான ஓவியங்களை வரைந்தார். 1478இல் குழந்தை ஏசுவின் அருகிலிருக்கும் மரியம்மையின் ஓவியத்தைத் தீட்டினார். இது பலரைக் கவர்ந்தது.

இலியனார்டோ 1482இல் மிலான் நகருக்குச் சென்றார். அங்கு உலூடோவீக்கோ என்னும் இளவரசரின் அரண்மனை ஓவியராக அமர்த்தப்பட்டார். இவர் பொறியியல் வல்லுநராக இருந்ததால் இளவரசர் மாளிகையின் அரண்களை வலுப்படுத்த உதவினார். பின்பு வெனிசு, பிளாரன்சு, உரோம் முதலிய இடங்களில் சில ஆண்டுகள் தங்கினார்.

1494இல் இவர் வரைந்த 'இறுதி விருந்து' என்னும் ஓவியம் உலகப் புகழ்பெற்றது. இவர் பிளாரன்சில் இருந்தபோது 'மோனலீசா' என்ற நேப்பிள்சு நகரப் பெண்ணின் அழகிய படத்தை வரைந்தார். 1516ஆம் ஆண்டில் பிரெஞ்சு மன்னர் முதலாம் பிரான்சிசு அழைப்பின்பேரில் இவர் பிரான்சு சென்றார். அங்கு இவருக்கு அளிக்கப்பட்ட மாளிகையில் தங்கிக அமைதியாகத் தம் வாழ்நாளைக் கழித்தார்.

*

# சடுகுடு

பாவலர் இளஞ்சித்திரன்

'சடுகுடு' என்னும் விளையாட்டு!
தமிழர் நம்மின் விளையாட்டு!
குடுகுடு வென்றே ஆடிடுவார்!
குழுவிரண் டாக ஆடிடுவார்!

மூச்சு விடாமல் வாய்பாடும்!
முன்னே றத்தான் கால்ஓடும்!
ஆச்சு போச்சென் றாள்பிடிக்கும்!
அவரை அமுக்கத் தோள்துடிக்கும்!

இரண்டு பக்கமும் துடிதுடிப்பு!
இருக்கும் பார்பார் விறுவிறுப்பு!
திரண்டு நின்று பார்த்திடலாம்!
சேர்ந்துகை தட்டி ஊக்கிடலாம்!

பாடும் பாட்டில் வீறிருக்கும்!
பழந்தமி ழர்வர லாறிருக்கும்!
சூடும் வெற்றிச் சிலம்பிருக்கும்!
தோள்களைத் தட்டும் மறமிருக்கும்!

எண்சாண் உடம்பும் விளையாடும்!
இருந்து, குனிந்து நிமிர்ந்தாடும்!
பண்டோர் கண்ட விளையாட்டு;
பாரினில் தமிழர் விளையாட்டு!

குருதி மொத்தம் தூய்மையுறும்!
குரலின் வளமும் மேன்மையுறும்!
பெருகும் வாழ்நாள்; கூடிவரும்!
பீடுடல் அழகும் தேடிவரும்!

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2002
T.N. P.M.G. (NR) 645/2002 தமிழ்ச்சிட்டு


## உங்கள் நண்பர்களிடம்

## சொல்லிவிட்டீர்களா... ?

பிறகு,
கிடைக்கவில்லையே என்று
வருந்தவேண்டாம்...

ஆம்...

# 'தமிழ்ச்சிட்டு'

புதிய வடிவில்
புதிய பொலிவில்

வண்ணக் குழைவில் - பல்சுவைப் பகுதிகள்.

குறைந்த விலையில் நிறைந்த செய்திகள்....!

ஆண்டுக் கட்டணம் கட்ட அணியமாகுங்கள்...!

அடுத்த மாதம் அறிவிப்பு வந்தவுடன்
கட்டிவிடுங்கள்!

**ஏமாற்றத்தைத் தவிருங்கள்.**

**தமிழ்ச்சிட்டு** (சிறுவர் கலை இதழ்)
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302
தொலைபேசி: 277 1231


தமிழ்ச்சிட்டு, மேடவாக்கம், சென்னை - 601 302.